தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நந்தன, பங்குனி 20, திருவள்ளுவர் ஆண்டு–2044

2013 ஏப்ரல் 2, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்”

செய்யும் தொழிலில் வெற்றி பெற விரும்புகிறவர், முன்னரே அத்தொழிலில் ஈடுபட்டு அனுபவம் பெற்றவர்களின் கருத்துகளை முதலில் நன்கு அறிந்துகொள்ள வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள்.*

121—

துணை மின் நிலையம்

***20591—திரு. வி.எஸ். இராஜி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, இலத்தூர் ஒன்றியம், நீலமங்கலம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

செய்யூர் தொகுதி, இலத்தூர் ஒனறியம், நீலமங்கலம் கிராமத்திற்கு அருகில் உள்ள சீவாடி கிராமத்தில், 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க ஐந்தாண்டுப் பெருந்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்குண்டான நிலம் கண்டறியப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

திரு. வி.எஸ். இராஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா கிருஷ்ணா' என்று மக்கள் அனைவரும் தெய்வத்திடம் முறையிடுவார்கள். அந்தத் தெய்வத்திற்கே திருக்கோயில் இல்லையென்றால், அந்தத் தெய்வத்திற்கே திருக்கோயில் வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களிடம் வேண்டினால், அந்தத் திருக்கோயிலை உடனடியாக வழங்கிவிடுவார்கள். அப்படிப்பட்ட எண்ணம்கொண்டவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற விவசாய மக்களின் நலன் கருதி, இன்றையதினம் செய்யூர் தொகுதிக்குட்பட்ட இலத்தூர் ஒன்றியத்தில் துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருந்தோம். அதைக் கருணையுடன் பரிசீலித்து, அமைத்துக் கொடுப்பதற்கு ஆணை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், செய்யூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத்

2013 ஏப்ரல் 2]

தொகுதிக்குட்பட்ட, திருமங்கலம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில், மேலக்கோட்டையை மையமாகக்கொண்டு ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அனுமதியோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாகளா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திருமங்கலம் பகுதியில் இருக்கின்ற மின் பளுவின் தேவையை ஆய்வு செய்து, தேவை ஏற்படின் நிதிநிலைக்கேற்ப அங்கே புதியதொரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த தமிழக மக்களுக்கு நாளும் ஒரு திட்டம் தந்து, தமிழகத்தில் நல்லாட்சி நடத்திவரும், திராவிட இயக்கத்தின் ஒப்பற்ற எங்கள் குலதெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து பணிவோடு வணங்குகிறேன். வாணியம்பாடி தொகுதி, நாட்ராம்பள்ளி ஒன்றியம், திம்மாம்பேட்டை ஊராட்சியில், கடந்த ஓர் ஆண்டிற்கு முன்பாக ஒரு ஏக்கர், 28 சென்ட் நிலம், 33/11 கே.வி. துணை மின் நிலையம் (Sub-station) அமைக்க மின்சார வாரியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இன்றுவரையிலே அந்தப் பணிகள் தொடங்கப்படாமல், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, பணிகளை உடனடியாகத் தொடங்கி செயல்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12—வது ஐந்தாண்டுப் பெருந்திட்டத்தின் மூலமாக அந்தப் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்டுள்ள அந்த இடத்திலே விரைவாக துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய பணிகளைச் செய்வதற்கான ஆணைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய அதிகாரிகளுக்கு வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே நிலம் கண்டறியப்பட்டாலும்கூட, சில இடங்களில் சம்பந்தப்பட்ட நிலத்தை வருவாய்த் துறை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைப்பதிலே சற்றுக் காலதாமதம் ஏற்பட்டுவிடுகிறது. அப்படிப்பட்ட இடையூறுகள் அல்லது காலதாமதம் ஏதாவது ஏற்பட்டு இருந்தாலும்கூட, அந்தக் காலதாமதத்தை எல்லாம் தவிர்த்து, விரைவாக அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது பூம்புகார் தொகுதியிலுள்ள பெரம்பூரில் 110 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க இடம் வாங்கப்பட்டு, மதிப்பீடும் தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்த நிதியாண்டிலேயே அந்த இடத்தில் பணியைத் துவங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக துணை மின் நிலையம் அமைக்கின்ற பணிகளை மேற்கொள்கின்றபோது இடம் கையகப்படுத்துவதுதான் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இடம் கண்டறியப்பட்டால், அப்படிக் கண்டறியப்பட்ட இடத்திற்கு, சில இடங்களில், சில நேரங்களில், சில எதிர்ப்புகளும் வருகின்றன. எதிர்ப்பு இல்லாமல் அந்த நிலம் கண்டறியப்பட்டாலும்கூட, சில நேரங்களில் அதற்கு வேண்டிய நிலத்தைக் கையகப்படுத்துவதிலே சில நிருவாக நடைமுறைகள் வருவாய்த் துறையின் மூலமாக ஏற்பட்டு, அந்த நிலத்தை ஒப்படைப்பதிலே சற்றுக் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவேதான், இதற்கென்று வருவாய்த் துறையின் மூலமாக அந்த நிலத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது.

பொதுவாக, வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடமாக இருந்தால், நிலம் மாற்றுவதை விரைவுபடுத்திவிட முடியும். ஆனால், தனியாருக்குச் சொந்தமான நிலங்களைக் கையகப்படுத்துவது என்றால் அதிலே சற்றுக் காலதாமதம் ஏற்படுகிறது. இருந்தாலும்கூட, அப்படிப்பட்ட காலதாமதத்தை எல்லாம் இனிமேல் தவிர்த்து, விரைவாக அந்தப் பணிகளை முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, அந்தப் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எந்தெந்த இடங்களில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றனவோ, அந்த இடங்களில் விரைவாக புதியதாக துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைந்து மேற்கொள்ளும் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

திரு. வே. குணசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். என்னுடைய திருவண்ணாமலை மாவட்டம்,

வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தில் சீமாபுதூரைச் சுற்றியுள்ள 15 ஊராட்சிகளுக்குட்பட்ட கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் நான் பொதுவாகச் சொல்லியிருக்கின்றேன். தேர்வு செய்யப்பட்ட இடங்களில் புதியதாக துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகளை விரைவுபடுத்துவதும், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, பல இடங்களில் இருந்து புதியதாக துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் இப்போது ஆய்வு செய்து, அந்தப் பகுதியில் புதியதாக துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அளவிற்கு மின் பளு அதிகரித்திருக்கிறது என்றால் தேவைக்கேற்ப அந்தப் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். என்னுடைய அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட, தணிகைபோளூர் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு இரண்டு ஏக்கர் பாட்டை புறம்போக்கு நிலம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. அந்த இடம் கொஞ்சம் பள்ளமாக இருப்பதாக மின்சாரத் துறை அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். ஆகவே, அந்தப் பள்ளத்தை உயர்த்தி அந்தப் பகுதியிலே ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் கையகப்படுத்தப்படுகின்றபோது, சில நேரங்களிலே தொழில்நுட்ப சாத்தியக் கூறுகளைப் பற்றியும் ஆய்வு செய்வார்கள். அந்த அளவிலே, தொழில்நுட்ப சாத்தியக் கூறுகளைப் பற்றி ஆய்வு செய்கின்றபோது, இடம் பள்ளமான பகுதியாக இருந்தால், தேர்வு செய்யப்பட்ட அந்தப் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைப்பது சற்றுக் கடினம். இருந்தாலும்கூட, அந்தப் பகுதியில் அந்தப் பள்ளத்தை மேடு செய்வதற்கு எந்தளவுக்குச் செலவாகும் என்று மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நில மதிப்பீட்டுச் செலவைவிட அதிகமாக இருக்கிறது என்று சொன்னால், மாற்று இடம் கண்டறியப்பட்டு, புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படும்; அல்லது அந்த மதிப்பீட்டுத் தொகை குறைவாகவே இருந்தால், பள்ளமாக இருக்கும் அந்தப் பகுதியை மேடுபடுத்தி, நிலத்தைச் சீரமைத்து, அந்தப் பகுதியிலேயே துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

122—

மறுவாழ்வு மையம்

***20381—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மாவட்டந்தோறும் மறுவாழ்வு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?